| HUNTSMAN<br>Enriching lives through innovation | CORPORATE GLOBAL POLICY |
|---|---|

| | | |
|---|---|---|
| Doc Ref. : | HRP-001 | நேர்மை<br>நாணயம்<br>மரியாதை<br>பொறுப்பு |
| Issue Date: | February 6, 2014 | |
| Revision : | | |
| Revision Date: | | |

| | |
|---|---|
| தலைப்பு: | மனித உரிமைகள் கொள்கை |
| கொள்கை: | மனித உரிமைகள் |


Copyright (c) 2014 Huntsman Corporation. All rights reserved.

| திருத்த எண் | மாற்றங்களுக்கான காரணம் | தேதி: | எழுதியவர்: | உரிமையாளர்: |
|---|---|---|---|---|
| 0 | முதல் பதிப்பு | பிப்ரவரி 6, 2014 | சக் ஓக்ஸ் (Chuck Oaks) | மனிதவளம் |


Copyright (c) 2014 Huntsman Corporation. All rights reserved.

# மனித உரிமைகள் கொள்கை

## 1. கொள்கை அறிக்கை

Huntsman மனித உரிமைகள் கொள்கையானது, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை ஆதரித்து மனித உரிமை மீறல்களுக்கு உடந்தையாவதைத் தவிர்க்க முயற்சிக்கும் நிறுவன கலாச்சாரத்தை உருவாக்குவதில் நமக்குள்ள பற்றுறுதியைக் காட்டுகிற, மனித உரிமைகள் தொடர்பான நம் செயல்கள் மற்றும் நடத்தைக்கான தத்துவங்களுக்கு வலுவூட்டுகிறது. இந்தத் தத்துவங்கள், உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declaration of Human Rights), மனித உரிமைகள் பிரகடனம் (Declaration of Human Rights), பன்னாட்டு பெருநிறுவனங்களுக்கான OECD வழிகாட்டுநெறிகள், ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய ஒப்பந்தம் (United Nations Global Compact), பணியிடத்திற்கான அடிப்படை தத்துவங்கள் மற்றும் உரிமைகள் குறித்த ILO பிரகடனம் ("ILO அடிப்படை விதிமுறைகள்" (ILO Core Conventions) என்றும் குறிப்பிடப்படுகிறது) போன்றவற்றை ஆதரிக்கின்றன, அவற்றின் உள்ளடக்கத்துடன் ஒத்திசைகின்றன.

## 2. கொள்கையின் வீச்சு

Huntsman மனித உரிமைகள் கொள்கையானது, நிறுவனத்தின் தொழில் நடத்தை வழிகாட்டுநெறிகளுடன் மிகச்சரியாகப் பொருந்துகிறது. இதுவே நேர்மை, நாணயம், மரியாதை, பொறுப்பு ஆகிய நமது விழுமியங்களை நிறைவு செய்வதை உறுதிப்படுத்துமாறு நம்முடைய நடத்தைகள், செயல்கள், முடிவுகள் ஆகியவற்றுக்கான உலகளாவிய எதிர்பார்ப்புகளை அமைக்கிறது. தொழில் நடத்தை வழிகாட்டுநெறிகள், நமது இணையாளர்களுக்கான மிக உயர்ந்த அளவு வழிகாட்டலைக் குறிக்கின்றன. தொழில் நடத்தை வழிகாட்டுநெறிகள், பாதுகாப்பான, மரியாதையான ஒரு பணிச் சூழலைப் பேணுதல், நியாயமான வேலைவாய்ப்பை வழங்குதல், ரகசியத்தன்மையை மதித்தல், ஊழல் எதிர்ப்புத் தேவைப்பாடுகளைப் பின்பற்றுதல், சுற்றுச்சூழல் பொறுப்புடைமையை ஊக்குவித்தல், பொறுப்பான சந்தைப்படுத்தலை நடத்துதல் ஆகியவற்றுக்கு வழிகாட்டல் அளிப்பதன் மூலம் மனித உரிமைகளை மதிப்பதை ஊக்குவிக்கின்றன.


Copyright (c) 2014 Huntsman Corporation. All rights reserved.

Huntsman நிறுவனங்களின் எல்லா இயக்குநர்கள், அதிகாரிகள், இணையாளர்கள்; எந்தத் துறைகள், துணை நிறுவனங்கள், முகவர்கள், ஆலோசகர்கள், அல்லது பிற பிரதிநிதிகள், நிறுவனம் பங்கேற்கும் கூட்டு நிறுவனங்கள் அல்லது பிற தொழில்வணிக நிறுவனங்கள் ஆகியவை நடத்தும் செயல்பாடுகள் உள்பட நிறுவனத்தின் எந்த செயல்பாடுகளிலும் Huntsmanஇன் சார்பாகச் செயல்பட அதிகாரமளிக்கப்பட்ட ஊழியர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஆகியோரும் தொழில் நடத்தை வழிகாட்டுநெறிகளைப் பின்பற்ற வேண்டும். தொழில் நடத்தை வழிகாட்டுநெறிகள், இந்தக் கொள்கை ஆகியவை மூலம் வெளிப்படுகிற, பணியிடத்தில் மனித உரிமைகள் மற்றும் சம வாய்ப்பு மீது தனக்குள்ள பற்றுறுதி தனது சப்ளையர்கள், விற்பனையாளர்கள், துணை ஒப்பந்த நிறுவனங்கள் ஆகியோருக்கும் இருக்க வேண்டும் என்று Huntsman எதிர்பார்க்கிறது.

## 3. கொள்கையின் குறிக்கோள்கள்

- கட்டாய அல்லது குழந்தை உழைப்பைப் பயன்படுத்தாத, சுதந்திரமாக கூட்டுசேர்வது, கூட்டாகப் பேச்சுவார்த்தை நடத்துவது ஆகியவற்றுக்கான உரிமைகளை மதிக்கிற பணியிடத்தை வழங்குவதற்கு Huntsman பற்றுறுதி கொண்டுள்ளது.

- தொல்லை மற்றும் பதிலடி உள்பட பாரபட்சத்திற்கு எதிரான கொள்கையில் மேலும் விவரிக்கப்பட்டுளபடி, இனம், நிறம், பாலினம், நாட்டினம், பாலியல் சார்பு, வயது, மதம், அல்லது ஊனத்தின் அடிப்படையில் சட்டவிரோதமாகத் தொல்லை தருதல், பாரபட்சமாகச் செயல்படுதல் ஆகியவை இல்லாத ஒரு பணியிடத்தை வழங்குவதில் Huntsman பற்றுறுதி கொண்டுள்ளது.

- இணையாளர்களுக்கு உள்ளூர் சந்தை மதிப்பாய்வுகளின் அடிப்படையில் போட்டி ரீதியான ஊதியத்தை அளிப்பதிலும், அடிப்படை மற்றும் கூடுதல் வேலைநேரங்கள் உள்பட வேலைச் சூழல்கள் தொடர்பான எல்லா சட்டங்களையும் பின்பற்றுவதிலும் Huntsman பற்றுறுதி கொண்டுள்ளது.

- Huntsman அது எந்தச் சமூகங்களிடையே செயல்படுகிறதோ அவற்றின் கலாச்சார விழுமியங்களை மதிப்பதில் பற்றுறுதி கொண்டுள்ளது. பொருந்தும் சர்வதேசத் தரநிலைகளால் வரையறுக்கப்பட்டுள்ளபடி பூர்வகுடிகளின் உரிமைகளை மதிப்பதும் இதில் அடங்கும்.

அச்சிடப்படும்போது கட்டுப்படுத்தப்படாத நகல்.

Copyright (c) 2014 Huntsman Corporation. All rights reserved.

- தேவையான சூழ்நிலைகளில் மட்டும் பாதுகாப்புச் சேவைகளைப் பயன்படுத்துவது, தேவையானபோதும் அச்சுறுத்தலுக்கு ஏற்பவும் மட்டும் ஆற்றலைப் பயன்படுத்துவது ஆகியவற்றின் மூலம், சர்வதேசத் தரநிலைகளுக்கு ஏற்ப நம்முடைய செயல்பாடுகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு Huntsman பற்றுறுதி கொண்டுள்ளது.

- Huntsman அதன் விழுமியங்களை, அதன் சப்ளையர்கள், விற்பனையாளர்கள், துணை ஒப்பந்த நிறுவனங்கள் ஆகியோரிடம் ஊக்குவிப்பதில் பற்றுறுதி கொண்டுள்ளது, அவர்கள் இந்த விழுமியங்களைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

- பங்குதாரர்கள் எழுப்பும் கவலைகளை கவனிப்பதற்கும் Huntsmanஇன் செயல்பாடுகள் மற்றும் தாக்கம் உள்ள இடங்களிலெல்லாம் மனித உரிமைகளை ஆதரிக்கப் பங்குதாரர்களுடன் பணியாற்றவும் Huntsman பற்றுறுதி கொண்டுள்ளது.

## 4. கொள்கையை நடைமுறைப்படுத்தல்

கொள்கைக் குறிக்கோள்களை அடைவதற்கு, Huntsman பின்வருவனவற்றை மேற்கொள்ளும்:

- கொள்கையைப் பின்பற்றுவதிலும் சந்தேகிக்கப்பட்ட மீறல்களைத் தெரிவிப்பதிலும் வழிகாட்டலும் பயிற்சியும் அளித்து கொள்கைக்கு ஆதரவளித்தல்

- தொழில் நடத்தை வழிகாட்டுநெறிகளின் கீழான அறிக்கைகளுக்காக நிறுவப்பட்ட அதே வழிமுறைகள் மூலம், இந்தக் கொள்கை மீறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நிகழ்வுகளைத் தெரிவிப்பதை ஊக்குவித்தல்

- சந்தேகிக்கப்பட்ட மீறல்கள், வர்த்தகப் பின்பற்றல் மேலாளரால் நிறுவப்பட்ட ஒரு குழுவால் புலனாய்வு செய்யப்படும், பொருத்தமான திருத்த அல்லது பிற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்


Copyright (c) 2014 Huntsman Corporation. All rights reserved.

- நிறுவன நடைமுறைகள் சீராக இருப்பதையும் பொருந்தும் நிர்வாக அமைப்புகளின் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளைப் பின்பற்றுவதையும் ஊக்குவிக்க செயல்முறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்

- வர்த்தகப் பின்பற்றல் திட்டத்தின் தணிக்கைத் தேவைப்பாடுகளின்படி சீரான இடைவேளைகளில் ஒரு கொள்கைத் தணிக்கையை நடத்துதல், தேவைப்படும்போது கொள்கையை அல்லது அதன் செயல்முறைகளையும் வழிகாட்டலையும் அதன் பலனளிப்புத்திறனைச் சார்ந்து இற்றைப்படுத்துதல். இயக்குநர் குழுவின் நியமன மற்றும் நிர்வாகக் குழு பொருத்தமானதாகக் கருதும் எந்த விதத்திலும் ஒரு தன்னிச்சையான தணிக்கையை Huntsman நாடலாம்

- குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறை, நிறுவனத்தின் மனித உரிமைகள் செயல்பாடு பற்றி இயக்குநர் குழுவுக்குத் தெரிவித்தல்


Copyright (c) 2014 Huntsman Corporation. All rights reserved.